### கோயம்பேடு அங்காடி வளாகத்தில் ரூ.17.40 கோடியில் சீரமைக்கப்படும்

# மழைநீர் வடிகால் பணிகள் போர்க்கால அடிப்படையில் நடைபெறுகிறது!

### ஆய்வுக்குப் பின் அமைச்சர் பி.கே.சேகர்பாபு தகவல்!

சென்னை, அக்.14 -

முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின் படி நேற்று முன்தினம் (12.10.2024) சென்னை, கோயம்பேடு மொத்த விற்பனை அங்காடி வளாகத்தில் 'A' சாலையின் நுழைவு வாயில் எண்.14 அருகில் சி.எம்.டி.ஏ. சார்பில் ரூ.86 லட்சம் மதிப்பீட்டில் புதுப்பிக்க ப்பட்டு வரும் மருத்துவ சேவை மையத்தினையும் (Mini Clinic) மற்றும் ரூ.17.40 கோடி மதிப்பீட்டில் சீரமைக்கப்படவுள்ள மழைநீர் வடிகால் பணிகளையும், கொளத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட அகரம், ஜெகநாதன் சாலையில் புதிதாக கட்டப்பட்டு வரும் மாநகராட்சி பன்னோக்கு மையத்தில் சி.எம்.டி.ஏ. சார்பில் ரூ.2 கோடி மதிப்பீட்டில் அமையவுள்ள பகிர்ந்த பணியிடத்தில் (Coworking Space) நடைபெற்று வரும் பணிகளையும், பெரியார் நகர் மற்றும் ஜவகர் நகர் நூலகத்தில் சி.எம்.டி.ஏ. சார்பில் பகிர்ந்த பணியிடம் (Coworking Space) அமைப்பதற்கான முன்னேற்பாட்டுப் பணிகள் குறித்தும் இந்து சமய அறநிலைத்துறை அமைச்சரும், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே. சேகர்பாபு நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்து சமய அறநிலைத் துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு செய்தியாளர்களிடம் பேசும்போது தெரிவித்ததாவது:-

கோயம்பேடு மொத்த விற்பனை அங்காடியில் பெருமழை வெள்ளத்தின் போது ஏற்படுகின்ற தண்ணீர் தேக்கத்திற்கு நிரந்தரத் தீர்வாக தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி முதல் கட்டமாக ரூபாய் 17.40 கோடி செலவில் மழைநீர் கால்வாய் அமைப்பதற்குண்டான ஒப்பந்தங்கள் நிறைவுற்று பருவமழையை பொறுத்து அந்த பணிகள் ஆரம்பிக்கப்பட உள்ளது. அதேபோல் ஏற்கனவே இருக்கின்ற புதிதாக கட்டப்பட இருக்கின்ற கால்வாய்களை தவிர்த்து ஒரு 850 மீட்டர் அளவிற்கு கோயம்பேடு மொத்த விற்பனை அங்காடி துவங்குகிறபோது கட்டப்பட்ட அந்தக் கால்வாயை மறு சீரமைக்க வேண்டும் என்று சட்டமன்றப் பேரவை உறுப்பினர் கோரிக்கை வைத்திருக்கின்றார். அந்த பணிகளும் ஏற்றுக் கொள்ளப்பட்டு. தற்பொழுது சென்னை மெட்ரோ ரெயில் பணிகள் நடைபெறுவதால் இந்தப் பகுதியில் பெய்கின்ற அவ்வப்போது மழை தண்ணீர் தேவை என்ற நிலை இருக்கின்றது.

சென்னை மெட்ரோ ரெயில் பணி முழுவதுமாக நிறைவுறுவதற்கும் சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் சார்பில் கட்டப்பட இருக்கின்ற 770 மீட்டர் அளவுக்குண்டான கால்வாய் பணிகளும் இந்த பருவ மழைக்குப் பிறகு தான் அவை முழுமையாக கட்டமான பணி நிறைவு பெறுகின்ற சூழ்நிலை இருப்பதால் அந்த இடத்தில் இந்த மழைக்கு தேங்குகின்ற தண்ணீரை வெளியேற்றுவதற்காக சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் சார்பில் 60 ஹெச்.பி. அளவிற்கு புதிதாக மோட்டார்கள் கொள்முதல் செய்யப்பட்டு இருக்கின்றன. அவைகளை உடனடியாக அந்தப் பகுதியில் நிறுவுவதற்கு இன்றைக்கு எங்களுடைய துறையின் உறுப்பினர் செயலாளர் அன்சுல் மிஸ்ரா, பெருநகர சென்னை மாநகராட்சி மத்திய வட்டார துணை ஆணையாளர் கே.ஜே.பிரவீன் குமார், விருகம்பாக்கம் சட்டமன்ற உறுப்பினர் ஏ.எம்.வி.பிரபாகர் ராஜா, இந்த கோயம்பேடு மார்க்கெட் பகுதியை கண்காணித்து வருகின்ற திருமதி.இந்துமதி, மாநகராட்சி மற்றும் உள்ளாட்சி பிரதிநிதி களும் ஒருங்கிணைந்து இன்றைக்கு ஆய்வினை மேற்கொண்டுள்ளோம்.

**கால்வாய் கசடுகள் உடனே அகற்றப்படும்!**

இந்த கோயம்பேடு மார்க்கெட் பகுதியில் தேங்குகின்ற இந்த நீரானது வெளியேற்றப்படுகின்ற பகுதிகளையும் அந்த கால்வாய்களையும் சுத்தப்படுத்துகின்ற பணிகளை மேற்கொள்வதற்காக அந்த இடங்களையும் ஆய்வு செய்து இருக்கின்றோம். போர்க்கால அடிப்படையில் அந்த பணிகள் அனைத்தும் இன்றைக்கு தொடங்க இருக்கின்றது. அந்தக் கால்வாய் பகுதியில் இருக்கின்ற கசடுகள் உடனடியாக அகற்றப்பட வேண்டும் என்று உத்தரவிடப்பட்டிருக்கின்றது. இந்த மழை தொடரும் என்று ஆரஞ்சு அலட் தந்திருக்கின்ற அந்த தேதிகளான 14, 15, 16 போன்ற தேதிகளுக்கு கூடுதலாக உடல் உழைப்பு பணியாளர்களை நியமித்து அந்த கால்வாய்கள் துரிதப்படுத்தி தூர்வாரின்ற பணியை மேற்கொள்வதற்கும் துறை சார்பில் உத்தரவிடப்பட்டு இருக்கின்றது.

ஆகவே இந்த பெருமழை சமாளிப்பதற்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுடைய உத்தரவின்பேரில், நம்முடைய துணை முதலமைச்சர் அவர்கள் மூன்று முறை கலந்தாய்வு கூட்டங்களை நடத்திருக்கின்றார். அந்த வகையில் போர்க்கால அடிப்படையில் பெருமழை வெள்ளம் ஏற்பட்டால் சமாளிப்பதற்குண்டான அனைத்து நடவடிக்கைகளும் துரிதப்படுத்து கின்ற ஒரு நிகழ்வாக தான் இன்றைய ஆய்வு அமைந்திருக்கின்றது.

**பணிகளை விரைந்து முடிக்க நடவடிக்கை!**

கேள்வி: பெருவெள்ளம் காலங்களில் கோயம்பேடு மார்க்கெட் சுற்றியுள்ள பகுதிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்ற மார்க்கெட் பகுதிக்கு உள்ள காய்கறிகள் அழுகும் நிலைமை அந்;ஐத பகுதியை எவ்வாறு சுத்தம் செய்யப்படும் அதுக்குண்டான நடவடிக்கைகள் என்ன?

பதில்: இந்த ஆய்வு தொடங்குவதற்கு முன்பு கோயம்பேடு மார்க்கெட் பகுதியில் புதிதாக ரூபாய் 86 லட்சம் செலவில் புதுப்பிக்கப்பட்டு வரும் மருத்துவமனை இன்று காலை ஆய்வு செய்தோம். அப்பொழுது நடந்த சிறிய கலந்தாலோசனையில் இந்த கழிவுகளை உடனுக்குடன் அகற்றுவதற்கு இந்த பருவ மழை காலங்களில் கூடுதலாக 20 பணியாளர்களை நியமிக்க நமது உறுப்பினர் செயலாளர் அவர்கள் உத்தரவிட்டிருக்கின்றார்கள். கோயம்பேடு மார்க்கெட் பகுதியை கண்காணித்து வருகின்ற திருமதி.இந்துமதி அவர்களிடமும் தெரிவிக்கப்பட்டுள்ளது. நாளைக்கே அந்த பணியாளர்களை சுழற்சி முறையில் அங்கு சேர்கின்ற குப்பைகளை கழிவுகளை அகற்றுவதற்குண்டான பணிகளும் துரிதப்படுத்த இருக்கின்றன.

**துக்கத்தில் இருந்தாலும் களத்தில் துணை முதல்வர்!**

கேள்வி : ரயில் விபத்தில் துணை முதலமைச்சர் ஆய்வு மேற்கொண்டு பாதிக்கப்பட்டவர்களை நேரில் சந்தித்துள்ளார் அதை நீங்கள் எவ்வாறு பார்க்கின்றீர்கள்?

பதில்: இந்த ஆட்சி சிறப்பாக செயல்படுகின்ற ஆட்சி என்பதற்கு காரணம் விபத்து நடந்த உடன் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், அமைச்சர் பெருமக்களை முடுக்கிவிட்டு விபத்து நடந்த பகுதிகளுக்கு மாவட்டத்தினுடைய சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் நாசர், அந்த மாவட்டத்தினுடைய ஆட்சியாளர், காவல்துறை போன்ற அனைவரும் உடனடியாக சம்பவ இடத்திற்கு சென்று மீட்பு பணியை துரிதமாக இருக்கின்றனர்.

நம்முடைய துணை முதலமைச்சர் நேற்றைக்கு முன்தினம் இருந்து தொடர்ந்து திராவிட கழகத்தினுடைய ஒரு வேராக, 'பில்லர்' ஆக கருதப்பட்ட அருமை அண்ணன் முரசொலி செல்வம் அவர்கள் துக்கத்தில் தொடர்ந்து இரண்டு நாட்கள் அங்கே நின்றபடி இருந்தாலும், மக்களுக்கு பாதிப்பு என்றவுடன் உடனடியாக களத்திற்குச் சென்று பாதிக்கப்பட்ட மக்களுக்கு உயர் சிகிச்சை அளிப்பதற்கும், பாதிக்கப்பட்ட மக்களை பார்த்து ஆறுதல் சொல்வதற்கும், களத்திற்கு சென்று பொதுமக்களிடையே, எங்களைப் போன்று களத்திலே நிற்பவர்களுக்கு ஒரு உற்சாகத்தையும் மோட்டிவேஷனையும் உருவாக்குகின்றது. அந்த மாவட்டத்தினுடைய பொறுப்பாளராக இருக்கக் கூடிய எங்கள் துறையினுடைய உறுப்பினர் செயலாளர் அன்சுல் மிஸ்ரா நேற்று இரவு இரண்டரை மணி வரையிலும் ஸ்டான்லி மருத்துவமனையில் தான் இருந்திருக்கின்றார். இப்படி அதிகாரிகளும் அரசியல் கட்சியும் பொறுப்பில் இருப்பவர்களும் ஒருசேர மக்களுக்கு துன்பம், துயரம் எழும்பொழுது பாடுபடுகின்ற திராவிட மாடலா ஆட்சியாக நம்முடைய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இந்த ஆட்சியை செலுத்துவதில் பெருத்த மகிழ்ச்சி அடைகிறோம்.

இவ்வாறு சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழும அமைச்சர் (ம) தலைவரும் மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சருமான பி.கே.சேகர்பாபு தெரி zவித்தார்.

இந்த ஆய்வுகளின்போது சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர் அன்சுல் மிஸ்ரா, பெருநகர சென்னை மாநகராட்சி மத்திய வட்டார துணை ஆணையாளர் கே.ஜே.பிரவீன் குமார், விருகம்பாக்கம் சட்டமன்ற உறுப்பினர் ஏ.எம்.வி.பிரபாகர் ராஜா, கோயம்பேடு மொத்த விற்பனை அங்காடி தலைமை நிர்வாக அலுவலர் திருமதி.மு.இந்துமதி, சி.எம்.டி.ஏ. கண்காணிப்புப் பொறியாளர்கள் ராஜமகேஷ்குமார், பாலமுருகன், சென்னை மெட்ரோ ரெயில் நிறுவன பொது மேலாளர் கே.ரவி, மாநகராட்சி மண்டல அலுவலர் ஏ.எஸ்.முருகன், சி.எம்.டி.ஏ. செயற்பொறியாளர்கள் ராஜன் பாபு, திருமதி.விஜயகுமாரி, மாநகராட்சி செயற்பொறியா ளர்கள் பெரியசாமி, செந்தில்நாதன், L&T நிறுவன திட்ட மேலாளர் குருசாமி, மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்கள் வி.லோகு, நாகராஜன், திருமதி.தாவூத்பீ, திருமதி. யோகபிரியா, திருமதி. அமுதா, திருமதி.சாரதா, திருமதி.ஸ்ரீதணி, அரசு அலுவலர்கள் மற்றும் உள்ளாட்சிப் பிரதிநிதிகள் ஐ.சி.எப்.முரளி, வழக்கறிஞர் சந்துரு ஆகியோர் உடனிருந்தனர்.

# பட்டிக்காடும் பட்டணமும்



**பட்டிக்காடு :** ஏன் தம்பி; "மக்களிடையே பிரிவினையை ஏற்படுத்துவது, மத ரீதியில் பிரச்சினையை ஏற்படுத்துவது போன்றவற்றில் ஈடுபடுகின்றனர்" என்று ஆர்.எஸ்.எஸ். தலைவர் மோகன் பகவத், எதிர்க்கட்சிகளை விமர்சித்திருக்கிறாரே ?

**பட்டணம் :** **ஆமாம் அய்யா; மதரீதியாகப் பிரிவினையை ஏற்படுத்தி, பிரச்சினையை உருவாக்க தொடர்ந்து முயற்சி செய்வது யார் என்பதை நாட்டு மக்கள் நன்றாக அறிந்துகொண்டிருக்கிறார்கள்.**

**மக்களைக் குழப்பி, குழம்பிய குட்டையில் மீன் பிடிக்க முடியுமா என்று பார்க்கிறார் ஆர்.எஸ்.எஸ். தலைவர். 'காவிச்' சாயம், வெளுத்து வருவதை அவரே அறிவார்.**

**"தான் திருடி, பிறரை நம்பாள்" என்று நமது நாட்டுப்புறப் பழமொழி ஒன்று உண்டே !**

### இராஜபாளையம் தொகுதி - 3 காப்பகத்தில் உள்ள

# 235 ஆதரவற்ற குழந்தைகளுக்கு - 8வது முறையாக புத்தாடைகள்!

### எஸ்.தங்கப்பாண்டியன் எம்.எல்.ஏ. வழங்கினார்!

இராஜபாளையம், அக்.14-

இராஜபாளையம் தொகுதி. பொன்னகரத்தில் உள்ள ஆதரவற்ற குழந்தைகள் காப்பகம், மருதுநகரில் உள்ள Light of life குழந்தைகள் காப்பகம் மற்றும் சேத்தூரில் உள்ள அருளோதயம் ஆதரவற்ற குழந்தைகள் காப்பகம் என 3 காப்பகத்தில் உள்ள 235 ஆதரவற்றகுழந்தைகளுக்கு 7 வருடங்களாக தீபாவளிக்குபுத்தாடை வழங்குவது போல் தற்போதும் 8 வது முறையாக அக்குழந்தைகளை இராஜபாளையம் ஆனந்தம் சில்க்ஸ் ஜவுளி கடைக்கு அழைத்து வந்து எஸ்.தங்கப்பாண்டியன் எம்.எல்.ஏ. தனது 90,91,92,93,94 வது மாத ஊதியத்திலிருந்து ( ரூபாய் 5,25,000) குழந்தைகளுக்கு பிடித்தமான புத்தாடையை குழந்தைகளே பார்த்து பார்த்து மகிழ்ச்சியுடன் தேர்வு செய்து எடுத்தனர்.

இந்நிகழ்வில் குழந்தைகளுடன் பேசிய எஸ்.தங்கப்பாண்டியன் எம்.எல்.ஏ., தங்களது எதிர்காலத்தை சிறப்பானதாக மாற்றக்கூடிய சக்தி கல்விக்கு மட்டுமே உள்ளது, அக்கல்வியை அனைத்து குழந்தைகளுக்கும் சிறப்பாகவும் தரமாகவும் வழங்க நமது தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கல்வி உதவித்தொகை திட்டம், புதுமைப்பெண் திட்டம் மூலம் மாணவ மாணவியர்களுக்கு மாதம் 1000 ரூபாய் வழங்கும் திட்டம், அரசு பள்ளியில் பயின்ற மாணவ மாணவியர்களுக்கு மருத்துவப்படிப்பில் 7.5% இட ஒதுக்கீடு திட்டம் போன்ற சிறப்பு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார், மேலும் பள்ளியில் இடைநிற்றலை கண்காணித்து எக்காரணத்திற்காக மாணவ மாணவியர்கள் கல்வியை தொடரமுடியவில்லை என்பதை ஆராய்ந்து அதனையும் சரிசெய்து கல்வித் துறையை சிறப்பாக வழிநடத்தி தமிழ்நாடு அரசு நிர்வகித்து வருகிறது, இந்த நிர்வாக திறமைக்கு மேலும் பலம் சேர்க்கும் வகையில் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் துணை முதலமைச்சராக பொறுபேற்றுள்ளார் உள்ளதால் அனைத்து துறைகளும் சீராக வளர்ச்சி பாதையில் பயணித்து வருகிறது என கூறினார்.

மேலும் ஆதரவற்ற குழந்தைகளுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களும் துணை முதலமைச்சர் அவர்களும் விருதுநகர் மாவட்டத்தின் அமைச்சர் பெருமக்கள் கே.கே.எஸ். எஸ்.ஆர்.இராமச்சந்திரன், தங்கம்தென்னரசு நாடாளுமன்ற உறுப்பினர் ஆகியோரும் இராஜபாளையம் சட்ட மன்ற உறுப்பினராகிய நானும் இராஜபாளையம் தொகுதி பொதுமக்களும் அன்றும் இன்றும் என்றும் உறுதுணையாக இருப்போம் என தங்கபாண்டியன் எம்.எல்.ஏ. வாழ்த்தி வழி அனுப்பி வைத்தார்.

அதனைத்தொடர்ந்து குழந்தைகள் அனைவரும் கவனமாக காப்பகத்திற்கு செல்லுமாறும் நீங்கள் ஆதரவற்ற குழந்தைகள் அல்ல அனைவரின் ஆதரவு பெற்ற குழந்தைகள் எனக் கூறி, தீபாவளி அன்று பட்டாசுகளை கவனமாக வெடித்து கொண்டாடுமாறு அவர் அறிவுரையும் வழங்கினார்,

இந்நிகழ்ச்சியில் நகர செயலாளர்கள் ராமமூர்த்தி மணிகண்டராஜா நகர் கழக நிர்வாகிகள் பாரத்ராஜ் மாரிமுத்து நாகேஷ்வரன் மற்றும் கவுன்சிலர்கள் கழக நிர்வாகிகள் குழந்தைச்செல்வங்கள் கலந்து கொண்டனர்.

### ஒன்றிய பா.ஜ.க. அரசின்

# அலட்சியத்தின் உச்சமே ரயில் விபத்துகள்!

### 'தினகரன்' நாளேடு தலையங்கத்தில் குற்றச்சாட்டு!

சென்னை,அக்.14-

ஒன்றிய பா.ஜ.க. அரசின் அலட்சியத்தால் ரயில் விபத்துகள் தொடர்ந்து நடைபெற்று வருகிறது என்று தினகரன் நாளேட்டின் நேற்றைய தலையங்கத்தில் சுட்டிக்காட்டியுள்ளது.

இது குறித்து தினகரனின் தலையங்கம் வருமாறு:



தினகரன்

அக்டோபர் 13, 2024 ஞாயிற்றுக்கிழமை

அலட்சியத்தின் உச்சம்

கர்நாடக மாநிலம், மைசூருவில் இருந்து கடந்த 2 நாட்களுக்கு முன்பு புறப்பட்டது பாக்மதி எக்ஸ்பிரஸ் ரயில். 27 பெட்டிகளை கொண்ட இந்த ரயிலில் 1600பேர் பயணித்தனர். பெங்களூரு, காட்பாடி, பெரம்பூர், வியாசர்பாடி வழியாக ஆந்திரா நோக்கி இந்த ரயில் சென்றது. பொன்னேரி ரயில்நிலையம் அருகே வந்தபோது, நேர் பகுதியில் செல்வதற்கு இந்த ரயிலுக்கு சிக்னல் கொடுக்கப்பட்டுள்ளது.

இதனால், திருவள்ளூரை அடுத்த கவரப்பேட்டை ரயில்நிலையம் நோக்கி 120கிலோ மீட்டர் வேகத்தில் முதலாவது வழித்தடத்தில் பாக்மதி எக்ஸ்பிரஸ் வந்துள்ளது. கவரப்பேட்டைக்கு ஒரு கிலோ மீட்டர் தொலைவில் வந்த எக்ஸ்பிரஸ் ரயில் டிரைவருக்கு லூப்லைன் என்று கூறப்படும் இரண்டாவது தடத்தில் செல்வதற்கு சிக்னல் கொடுக்கப்பட்டுள்ளது. அதன்படி, டிரைவர் லூப்லைனில் ரயிலை இயக்கியுள்ளார். அதே நேரத்தில் அதே

கர்நாடக மாநிலம், மைசூருவில் இருந்து கடந்த 2 நாட்களுக்கு முன்பு புறப்பட்டது பாக்மதி எக்ஸ்பிரஸ் ரயில், 27 பெட்டிகளை கொண்ட இந்த ரயிலில் 1600பேர் பயணித்தனர். பெங்களூரு, காட்பாடி, பெரம்பூர், வியாசர்பாடி வழியாக ஆந்திரா நோக்கி இந்த ரயில் சென்றது. பொன்னேரி ரயில்நிலையம் அருகே வந்தபோது, நேர் பகுதியில் செல்வதற்கு இந்த ரயிலுக்கு சிக் னல் கொடுக்கப்பட்டுள்ளது.

இதனால், திருவள்ளூரை அடுத்த கவரப்பேட்டை ரயில்நிலையம் நோக்கி 120கிலோ மீட்டர் வேகத்தில் முதலாவது வழித்தடத்தில் பாக்மதி எக்ஸ்பிரஸ் வந்துள்ளது. கவரப்பேட்டைக்கு ஒரு கிலோ மீட்டர் தொலைவில் வந்த எக்ஸ்பிரஸ் ரயில் டிரைவருக்கு லூப்லைன் என்று கூறப்படும் இரண்டாவது தடத்தில் செல்வதற்கு சிக்னல் கொடுக் கப்பட்டுள்ளது. அதன்படி, டிரைவர் லூப் லைனில் ரயிலை இயக்கியுள்ளார். அதே நேரத்தில் அதே தடத்தில் 75பெட்டிகளுடன் நின்று கொண்டிருந்த சரக்கு ரயிலின் பின்பகுதியில் பாக்மதி எக்ஸ்பிரஸ் ரயில் மோதியுள்ளது. இதில், ரயிலின் 13பெட்டி கள் தண்டவாளத்தில் இருந்து தடம் புரண்டது. 3பெட்டிகள் திடீரென தீப்பற்றி எரியத் தொடங்கி யது. இதில் 13பேர் படுகாயமடைந்த நிலையில் தீவிர சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர். மீட்பு பணிகள் துரித கதியில் நடந்து வருகிறது. இந்தியாவில் ஒன்றிய அரசின் கட்டுப்பாட்டில் இயங்கும் ரயில்வே துறையில் சமீப காலமாக விபத்துக்கள் அதிகரித்து வருவது மக்கள் மத்தி யில் பல்வேறு கேள்விகளை எழுப்பியுள்ளது. குறிப்பாக பாஜ ஆட்சிக்கு வந்த பிறகு நடந்த விபத்துகள் என்பது நாடு முழுவதும் பெரும் அதிர்வுகளை ஏற்படுத்தி வருகிறது. 2010ம் ஆண்டு மே மாதம், மேற்கு வங்கத்தில் சரக்கு ரயிலும், விரைவு ரயிலும் மோதிக் கொண்ட விபத்தில் 148 பயணிகள் உயிரிழந்தனர் . 2023ம் ஆண்டு ஜூன் மாதத்தில் ஒடிசாவின் பாலசோர் மாவட்டத்தில் கோரமண்டல் விரைவு ரயில் விபத்தில் சிக்கியது. இதில் 20க்கும் மேற்பட்ட பெட்டிகள் தடம் புரண்டதில் 296 பேர் பலியாகினர். ஆயி ரத்திற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர்.

நடப்பாண்டு (2024) ஜூன் மாதம் மேற்கு வங்கத்தின் டார்ஜிலிங் மாவட்டம் நியூஜல்பை குரி அருகே சரக்கு ரயிலும், விரைவு ரயிலும் மோதிக் கொண்டதில் 15பேர் உயிரிழந்தனர். நூற்றுக்கணக்கானோர் காயமடைந்தனர். இதன்படி கடந்த 13ஆண்டுகளில் மட்டும் ரயில் விபத்தில் 459பேர் பலியாகி உள்ளனர். ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் உடல் உறுப்புகளை இழந்து நிர்க்கதியாக நிற்கின்றனர். ஒன்றிய ரயில்வே துறையில் 6நாட்களுக்கு ஒரு சாதாரண ரயில் விபத்து என்பது தொடர்கதையாகி வருகிறது. அவ்வப்போது கோர விபத்துக்களும் அரங்கேறி வருகிறது . கடந்த காலங்களில் இது போன்ற விபத்துகள் நடந்தால் அந்த துறை அமைச்சர் அதற்குரிய பொறுப்பை ஏற்பார். அடுத்து இதுபோன்ற அபாயங்கள் நிகழாமல் இருப்பதற்கு அரசு உரிய நடவடிக்கை மேற்கொள்ளும். ஆனால், தற்போதைய ஒன்றிய ரயில்வே துறை அலட்சியத்தின் உச்சத்தில் உள்ளது என்பதற்கு தொடரும் ரயில் விபத்துகள் பெரும் சாட்சியாக நிற்கிறது. ஒன் றிய அரசின் மெத்தனத்திற்கு அனைத்து அரசி யல்கட்சி தலைவர்களும் வேதனை தெரிவித்துள்ளனர். குறிப்பாக நாடாளுமன்ற எதிர்க்கட்சி தலைவர் ராகுல்காந்தி, "பல விபத்துகளில் பல உயிர்கள் பலியாகி இருந்தாலும் ஒன்றிய அரசு பாடம் கற்கவில்லை. இந்த அரசு விழித்துக் கொள்ளும் முன்பு எத்தனை குடும்பங்கள் அழிக் கப்படுமோ?" என்று கேட்டிருப்பது ஒட்டு மொத்த மக்களின் கேள்வி என்றால் அது மிகையல்ல.

இவ்வாறு தினகரன் தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது

# அஞ்சலகத்தில் செயல்படும் செல்வமகள் சேமிப்பு திட்டம்!

### தமிழ்நாடு 8வது ஆண்டாக முதலிடம்!

சென்னை, அக்.14-

பெண் குழந்தைகளுக்கான செல்வமகள் சேமிப்பு திட்டத்தை சிறப்பாக செயல்படுத்துவதில் தமிழ்நாடு வட்ட அஞ்சல்துறை தொடர்ந்து 8வது ஆண்டாக முதலிடத்தைப் பிடித்துள்ளது.

சர்வதேச அஞ்சல் சங்கம் கடந்த 1874ம் ஆண்டு தொடங்கப்பட்டது. இதைக் குறிக்கும் வகையில், ஆண்டுதோறும் அக்டோபர் 7ம் தேதி முதல் 11 ம் தேதி வரை தேசிய அஞ்சல் வாரம் கொண்டாடப்படுகிறது. இதை முன்னிட்டு, தமிழ்நாடு வட்ட அஞ்சல் துறை சார்பில், தமிழ்நாட்டில் செயல்படுத்தப்பட்டு வரும் முக்கிய திட்டங்கள் குறித்து தகவல் வெளியிடப்பட்டுள்ளது. அஞ்சல் நிலையங்களில் ஆதார் பதிவு மற்றும் திருத்தங்கள் மேற்கொள்வதற்காக ஆயிரத்து 457 கவுன்ட்டர்கள் திறக்கப்பட்டுள்ளன. ஏற்றுமதி மற்றும் சர்வதேச அஞ்சல் சேவைகளுக்காக 66 அஞ்சல் நிலையங்களிலும், பாஸ்போர்ட் விண்ணப்பிப்பதற்காக 30 அஞ்சலகங்களிலும் கவுன்ட்டர்கள் திறக்கப்பட்டுள்ளன. பள்ளி மாணவர்களிடையே சேமிப்பு பழக்கத்தை ஏற்படுத்துவதற்காக இந்தியா போஸ்ட் பேமென்ட் வங்கியுடன் இணைந்து தமிழ்நாடு முழுவதும் 51.5 லட்சம் குழந்தைகளுக்கு சேமிப்புக் கணக்கு தொடங்கப்பட்டுள்ளது. பெண் குழந்தைகளுக்கான செல்வமகள் சேமிப்பு திட்டத்தை சிறப்பாக செயல்படுத்துவதில் தமிழ்நாடு வட்டம் தொடர்ந்து 8வது ஆண்டாக முதலிடத்தைப் பிடித்துள்ளது.



இராஜபாளையம் தொகுதி. பொன்னகரத்தில் உள்ள ஆதரவற்ற குழந்தைகள் காப்பகம், மருதுநகரில் உள்ள Light of life குழந்தைகள் காப்பகம் மற்றும் சேத்தூரில் உள்ள அருளோதயம் ஆதரவற்ற குழந்தைகள் காப்பகம் என 3 காப்பகத்தில் உள்ள 235 ஆதரவற்றகுழந்தைகளுக்கு 7 வருடங்களாக தீபாவளிக்குபுத்தாடை வழங்குவது போல் தற்போதும் 8 வது முறையாக அக்குழந்தைகளை இராஜபாளையம் ஆனந்தம் சில்க்ஸ் ஜவுளி கடைக்கு அழைத்து வந்து எஸ்.தங்கப்பாண்டியன் எம்.எல்.ஏ. தனது 90,91,92,93,94 வது மாத ஊதியத்திலிருந்து (ரூபாய் 5,25,000) குழந்தைகளுக்கு பிடித்தமான புத்தா டையை குழந்தைகளே பார்த்து பார்த்து மகிழ்ச்சியுடன் தேர்வு செய்து எடுத்தனர். இந்நிகழ்ச்சியில் நகர செயலாளர்கள் ராமமூர்த்தி மணிகண்டராஜா நகர் கழக நிர்வாகிகள் பாரத்ராஜ் மாரிமுத்து நாகேஷ்வரன் மற்றும் கவுன்சிலர்கள் கழக நிர்வாகிகள் குழந்தைச்செல்வங்கள் கலந்து கொண்டனர்.